**திஸ்ஸமஹாராம பிரதேச சபை - 2023**
**---------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 15,892,994 தொகை மற்றும் நிரந்தர பதவியணிக்காக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் மந்திரிமார் கொடுப்பனவு மீளளிப்பு செய்யும் போது முறையே குறைவாக மீளளிப்பு செய்யப்பட்ட ரூபா 86,126 தொகை பெற வேண்டியதென மற்றும் மிகையாக மீளளிப்பு செய்யப்பட்ட ரூபா 36,784 தொகை பெற வேண்டியவை என கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய வருமானம் மற்றும் மீளளிப்புகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மூலதனச் செலவீட்டுக்கான அரசிறை உதவு தொகை கணக்கின் பெறுமதி ரூபா 8,978,081 தொகை மற்றும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 1,068,026 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டிற்குரிய மூலதனப் பெறுவனவுகளின் கூட்டுப் பெறுமதியாகிய ரூபா 816,446 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காமல் ஆண்டிற்கான மூலதன வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆண்டிற்குரிய வருமானம் மாத்திரம் ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்காமையால் மீளளிப்பு செய்யப்பட்டிருக்காத வீதி விளக்கு பராமரிப்புக் கட்டணம் ரூபா 704,653 தொகை பெற வேண்டிய வருமானம் ஒன்று என மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீளளிப்பு செய்யப்படாத வருமானம் கணக்கீடு செய்யப்படக் கூடாது. |
| (உ) | மீளாய்வாண்டிற்காக உடன்படிக்கை மேற்கொள்ளல் அல்லது கட்டளையிட்டிருக்காமல் தன்னியக்க மின்சார சுவிஷ் கொள்வனவு செய்வதற்காக ரூபா 500,000 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் பெறுமதி அந்தத் தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கை மேற்கொண்டிருந்த செலவுகளுக்காக மாத்திரம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுகளுக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 424,228 இற்கான களியாட்ட வரி வருமானம் பலவின வைப்புக்களின் கீழ் பொறுப்பொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 2017 ஆண்டிற்குரிய பெற வேண்டிய களியாட்ட வரி கடன்பட்டோருக்காக வழங்கியிருந்த ரூபா 295,940 இற்கான காசோலை மதிப்பளிக்கப்படாமையால் கடன்பட்டோர் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது மீண்டும் கடன்பட்டோர் ஏற்படுத்தியிருந்தமையால் வருட இறுதியில் கடன்பட்டோர் மீதி அந்த பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | கூட்டுப் பெறுமதி ரூபா 186,771 தொகைக்கான மீண்டுவரும் செலவுகள், மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களில் இருந்து 1% வரி வருமானத்தில் முன்னைய ஆண்டிற்குரிய கிடைத்திருந்த ரூபா 400,584 தொகை கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆண்டிற்கான வருமானம் மாத்திரம் ஆண்டிற்கான வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்படவேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 10,716,661 இற்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியவில்லை. | சில மீதிகள் முன்னர் இருந்து காணப்படுகின்றது எனவும், விபரங்கள் கண்டறிய முடியாதுள்ளது எனவும், இனங்காணக்கூடிய மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்ளுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 52 | திஸ்ஸ மஹாராம பொதுச் சந்தையில் இலக்கம் 40 மற்றும் 41 கடை பக்கிகளுக்கு அண்மையில் 150 சதுர அடியைக் கொண்ட அங்கீகாரமற்ற கடையறையொன்று நிர்மாணித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறையை உடைத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(2) | சபைக்குரிய வீதவரி எல்லையை விரிவாக்குவதற்காக 2013 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளின் போது 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முன்னேற்றப்பட்ட பிரதேசம் என இனங்கண்டிருந்த போதிலும் அந்தப் பிரதேசங்களை வெளியிடுவதற்கு தேவையான தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி அறவீடு செய்வதற்காக 2023 ஆண்டு முதல் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை பெயரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1946 இன் 30 இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 | 2007 ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவிடப்பட்டிருந்தமையால் பெறுமதி மதிப்பீடு கால ரீதியாக செயற்படுத்தப்பட்டிருக்காத காலம் 12 வருடங்களாகும். | புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளும் படி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வேண்டியிருந்த போதிலும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய பெறுமதி மதிப்பீடு மீது வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஜனவரி 27 திகதி இலக்கம் 01/2023 கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி 02 (இ)(viii) | பதவியணி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் இடைநிறுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்படாமல் மீளாய்வாண்டின் போது சபையின் செயலாளருக்கு இடர் கடன், விழா மற்றும் விஷேட | கடன் தொகை தவணைகளாக அறவிடப்படுகின்றது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முற்பணம் என மொத்தம் ரூபா 264,000 இற்கான கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2010 திசெம்பர் 27 திகதிய இலக்கம் தபபா/பபாகோ/2010/01 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்) சுற்றிக்கையின் பந்தி 06 | கடையறைகளுக்காக அரச விலை மதிப்புத் திணைக்களத்தினால் கிடைத்திருந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை வினைப்படுத்தும் கால வரையறைகளின் படி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை புதிய பெறுமதி மதிப்பீடொன்றின் மூலம் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான 418 கடையறைகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்காததுடன், கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு புதிய பெறுமதி மதிப்பீடு செயற்படுத்தப்படாதிருந்த காலம் 92 மாதங்களுக்கும் 19 மாதங்களுக்கும் இடைப்பட்டு காணப்பட்டது. | 23 கடையறைகளுக்காக புதிய பெறுமதி மதிப்பீடு கிடைத்திருந்ததெனவும், மீதியான கடையறையான கடையறைகள் பெறுமதி மதிப்பீடு செய்யும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது என. | கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்து புதிய வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 22,105,097 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,342,531 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,072,086 | 3,397,609 | 4,135,145 | 3,906,792 | 3,132,086 | 3,144,139 | 3,458,490 | 4,644,327 |
| வாடகை | 16,694,830 | 13,701,423 | 18,337,271 | 3,931,896 | 15,139,002 | 14,083,204 | 14,810,927 | 8,567,744 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,597,192 | 9,764,727 | 10,135,007 | 545,870 | 5,207,392 | 8,819,563 | 9,384,628 | 914,986 |
| ஏனைய வரு மானங்கள் | 15,633,000 | 24,751,809 | 24,298,145 | 18,889,968 | 12,249,876 | 11,661,818 | 11,360,192 | 1,435,304 |
| **மொத்தம்** | **40,997,108** | **51,615,568** | **56,905,568** | **27,274,526** | **35,728,356** | **37,708,724** | **39,014,237** | **15,562,361** |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2120 அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 3,181,852 தொகை மற்றும் 233 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 3,363,325 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் முறையே 158(1) மற்றும் 159(1) இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய வீதவரி ரூபா 119,890 தொகை அறவீடு செய்திருந்ததுடன், ரூபா 5,000 இற்கு மிகையாக நிலுவைகளுக்கான சிவப்பு அறிவித்தல் அனுப்புவதற்கும் மற்றும் கடை வாடகை ரூபா 334,257 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 171 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய வியாபார வரி ரூபா 429,000 தொகை மற்றும் களியாட்ட வரி வருமானம் ரூபா 295,940 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வியாபார வரி ரூபா 60,000 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா 85,800 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | பெற வேண்டிய கல் கிரஷர் வாடகை வருமானம் ரூபா 443,996 தொகை மற்றும் கழிவறை வாடகை ரூபா 40,250 தொகை மற்றும் வீட்டு வாடகை ரூபா 84,325 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கழிவறை வாடகை நிலுவையை பதிவழிப்பதற்கும் மற்றும் மீதியான நிலுவைகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | திஸ்ஸ பழைய பஸ் நிலையத்திற்கு முன்னால் காணப்படும் 03 ஆம் இலக்க கடையறையை வாடகைக்கு எடுத்தவரினால் மாதாந்தம் ரூபா 1,500 வீதம் ரூபா 55,125 இற்கான கடை வாடகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் வாடகையாளருடன் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருக்கவில்லை. | நிலுவை தொகையை பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 139,800 தொகை, வாகனத் தரிப்பிடக் கட்டணம் ரூபா 406,070 தொகையையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவத்தல் பலகைக் கட்டணம் ரூபா 122,200 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், வாகனத் தரிப்பிடக் கட்டணம் 2022 ஆண்டின் நிலுவையை பதிவழிப்பதற்கு சமர்ப்பிப்பதற்கும் மற்றும் மீதி நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | சபை வருமானப் பரிசோதகரினால் வருடாந்த அறிவித்தல் பலகை | எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் | சிட்டையிடப்படாத வருமானம் பொறுப்பான |

| | | | |
|---|---|---|---|
| | கணிப்பீடு சரியாக மேற்கொள்ளாமையால் மீளாய்வாண்டிற்கான அறிவித்தல் பலகை கட்டண கணிப்பீட்டு அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்காத 14 அறிவித்தல் பலகைகளுக்காக பெற வேண்டிய மீதி ரூபா 199,500 தொகையாகும். | இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என. | தரப்பினர் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த சாக்கடை பவுஸர் சேவைக் கட்டணம், வாகனங்கள் வாடகைக்கு கொடுத்தல் மற்றும் குப்பைகள் அகற்றும் கட்டணம் முறையே ரூபா 68,225 , ரூபா 460,395 தொகை மற்றும் ரூபா 304,450 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சாக்கடை பவுஸர் நிலுவையில் ரூபா 56,100 மற்றும் குப்பைகள் அகற்றுவதில் ரூபா 48,750 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஏ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,777,667 தொகை மற்றும் ரூபா 22,601,844 தொகை காணப்பட்டது. | முத்திரைக் கட்டண நிலுவையில் ரூபா 5,000,000 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பண நிலுவை அறவிடப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பன்னெகமுவ பொது சந்தையில் புதிய வர்த்தக தொடர் கட்டிடத்தில் 28 கடையறைகள் மற்றும் திறந்த கட்டிடம் ஒன்று ரூபா 62,915,634 இற்கான செலவொன்றின் மூலம் மாவட்ட செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டு 2021 ஆண்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2023 திசெம்பர் 11 திகதியளவிலும் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் கட்டிட வளாகத்தில் காடுகள் வளர்ந்து கடுமையாக அசுத்தமடைந்து இருந்தது. இந்த பொதுமக்கள் பண விரயம் மற்றும் சபைக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய வருமானத்தை கைவிடுவதற்கு செயற்பட்டிருந்தலாகும். | பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அது கிடைத்தவுடன் கடையறைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் மூலம் உச்சமட்ட நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 48 கடையறைகளை கொண்ட தரைமாடியும், பிரதேச சபை செயலகம் பேணிச் செல்வதற்காக முதலாம் மாடியும், கூட்ட மண்டபத்திற்காக இரண்டாவது மாடியும் அடங்கிய நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திஸ்ஸமஹாராம பஸ் நிலையத்திற்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் 2019 திசெம்பர் 02 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 48 கடையறைகள் அமைந்துள்ள தரைமாடியின் வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய இரண்டு மாடிகளின் நிர்மாண வேலைகள் கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கட்டிடம் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கடையறைகளை வாடகைக்கு கொடுத்து நடவடிக்கை எடுத்திருக்காததுடன், ஏனைய இரண்டு மாடிகளினதும் வேலைகளை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் பெற்று நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படும் என. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 நவம்பர் 07 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 22/99(XXXIII) இற்கு இணங்க போக்குவரத்து வசதிகள் வழங்கும் உத்தியோகத்தர்களுக்கு அலுவலகம் மற்றும் வதிவிடத்துக்கு இடையே பிரயாணம் செய்யக் கூடிய உச்சமட்ட தூரத்தின் எண்ணிக்கை 50 கிலோமிற்றரை மிகைக்காமல் இருக்க வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்படாமல் சபைச் செயலாளரினால் ஒரு நாளைக்கு போவதற்கு மற்றும் வருவதற்கு 100 கிலோமீற்றரை மிகைத்து போக்குவரத்து வசதிகள் பெற்றுக் கொண்டிருந்தது. 2020 நவம்பர் 02 திகதிய முன்னர் 2023 ஒக்தோபர் 02 வரை காலப்பகுதியில் ஒரு நாளைக்கு 100 கிலோமீற்றர்களை விட மிகையாக ஓடியிருந்த 19272 கிலோமீற்றர் தொகைக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 323,403 இற்கான மேலதிக எரிபொருள் கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்க முரணாக செயற்பட்டு சபை நிதியத்திற்கு ஏற்படுத்தியிருந்த நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடம் அறவிட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட அளவினை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த 9 நிர்மாண வேலை வரைபுகள் தொடர்பாக மற்றும் குறிப்பிட்ட காலப் பகுதியில் நிர்மாண வேலைகள் மேற்கொண்டிருக்காத 06 கட்டிட வரைபுகள் தொடர்பாக தேசிய அரச சபையின் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கு 2021 ஜுலை 08 திகதிய இலக்கம் 2235/54 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தத்தின் படி அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 1,311,699 இற்கான மற்றும் ரூபா 30,000 இற்கான அணவல் அங்கீகாரம் வழங்கும் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட ஒழுங்குபடுத்தல் கட்டணத்தை அறவீடு செய்து திருத்திய வரைபினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மற்றும் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கும் கட்டணம் அறவிடப்படும் என. | சட்டத்தின் மற்றும் திருத்திய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதி கூட்டிய வரி (VAT) அறவீடு செய்வதற்காக செல்லுபடியாகும் பதிவொன்று இன்றி சபையினால் 2023 ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கும் போது பெறுமதி கூட்டியவரி ரூபா 24,224 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. | கட்டணங்களை திருத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | பெறுமதி கூட்டிய வரிக்காக பதிவு செய்யதிருக்காத சந்தர்ப்பத்தில் அந்த வரி அறவிடப்படக் கூடாது. |
| (ஆ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 46 கைத்தொழில்களுக்காக அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பெற வேண்டிய ரூபா 227,700 இற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் அறவீடு செய்தல் தொடர்பாக சபை முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டது என. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கி கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்வேறு காரணங்களினால் 2023 பெப்ரவரி மாதம் டென்டர் பண்ணப்படாத 07 கடையறைகள் காணப்பட்டதுடன் அவற்றின் குறைபயன்பாட்டுடன் காணப்பட்ட காலம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 10 மாதங்கள் ஆகும். | மின்சார தொடர்பு வழங்கிய பின்னர் இந்த கடையறைகளை டென்டர் பண்ணப்படும் என. | கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு தாமதம் இன்றி செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் அனுமதிக்கப்படும் 03 வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் 39 காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

### 3.6 செயற்திட்டங்கள், கருமங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது செயற்படுத்துவதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 37,500,000 தொகைக்கான 04 அபிவித்தித் திட்டங்கள் ஆண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். |

### 3.7 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 3.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு புறம்பாக மாணவ திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பரிசு வழங்குவதற்காக அவசர பெறுகை என கணித்து கூட்டுத்தொகை ரூபா 140,250 இற்கான 120 பக்கங்கள் கொண்ட 830 CR புத்தகங்கள் சபை நிதியத்திலிருந்து கொள்வனவு செய்திருந்தது. | பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 174 இன் படி செயற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டல் கோவையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.6.1(அ) இன் படி கொள்வனவு செய்ய வேண்டிய பண்டங்கள் அல்லது வேலைகளுக்காக விவரக் குறிப்புக்கள் குறிப்பிட்ட பெறுகை குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தேவையான அளவினை விட குறுகிய முறையில் விபரங்கள் குறிப்பிடக் கூடாது எனவும், மீளாய்வாண்டின் போது கூட்டுப்பெறுமதி ரூபா 413,195 தொகைக்கான 06 டயர்கள் கொள்வனவு செய்யும் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

### 3.8 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை நிதியத்தில் இருந்து சரளைக் கற்கள் பயன்படுத்தி 05 கிராமிய பாதைகள் அபிவிருத்தி செய்வதற்காக சரியான கூறுவிலைகள் பயன்படுத்தப்படாமையால் ரூபா 1,276,037 தொகை மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இரண்டு தடவைகள் சரளைக் கற்கள் ஏற்றுவதற்கான கூறுவிலைகள் உட்படுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் தயாரித்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சரளைக் கற்களை பயன்படுத்தி அபிவிருத்தி செய்திருந்த 05 பாதை செயற்திட்டங்களுக்காக சரளைக் கற்கள் போக்குவரத்து செய்த டிபர் வண்டிகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது பாதை ரேட் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரேட்கள் பயன்படுத்தாமல் கூறுவிலைகள் அழைப்பதன் மூலம் பெற்றிருந்த கூறுவிலைகளின் அடிப்படையில் கொடுப்பனவு செய்தமையால் சபை நிதியத்திலிருந்து ரூபா 400,413 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | டிபர் வண்டிகளிலிருந்து கூறுவிலைகள் அழைக்கப்பட்டு குறைந்த கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த வழங்குனர் தெரிவு செய்யப்பட்டது என. | மிகையாக செலுத்தியிருந்த போக்குவரத்து கட்டணத்தை அறவீடு செய்ய வேண்டும். |

### 3.9 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரித்த மற்றும் உள்ளவாறான பதவியணிகள் முறையே 104 மற்றும் 90 ஆகக் காணப்பட்டமையால் 08 பதவிகளுக்கான 18 மிகைகளை முறைப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதவியணி மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 இலக்கங் கொண்ட அரச செலவினங்களை கட்டுப்படுத்துதல் தொடர்பான தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி 03(vii) குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு புறம்பாக 05 தற்காலிய சுகாதார தொழிலாளர்கள் அங்கீகாரமின்றி சேர்க்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை ரூபா 999,701 தொகை சம்பளம் செலுத்தியிருந்த போதிலும் சபையின் சுகாதார தொழிலாளர்கள் 22 இற்கான மிகையொன்று காணப்பட்டது. | சேவையின் தேவைப்பாட்டின் மீது ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டது என. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

## 3.10 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குப்பைகளை அகற்றுவதற்காக உத்தகந்தர கிராம உத்தியோகத்தர் பிரிவில் 20 ஏக்கர் காணிப் பகுதியொன்று பெற்றுத் தரும் படி 2022 ஆண்டின் போது சபையின் தவிசாளரினால் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அந்த காணியை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. அவ்வாறு உரித்தாக்கியிருக்காத போதிலும் சபையினால் எடுத்துவரக் கூடிய குப்பைகளை மற்றும் சாக்கடை கழிவுப் பொருட்களை இந்த காணியில் முறையற்ற விதமாக இடப்படல் மற்றும் சபையின் வீதி அபிவிருத்தி அலுவல்களுக்காக சரளைக் கற்கள் வெட்டுதல் இந்த காணியில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | விண்ணப்பிக்கப்பட்ட நில அளவை விட 4.6122 ஹெக்டயர்கள் சாட்டுவதற்கு பிரதேச செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார் என. | முறைசாரா விதமாக குப்பைகளை அகற்றுதல் மற்றும் மணவெட்டுதல் மேற்கொள்ளப்படக் கூடாது. |